# செம்பதாகை

மலர் 6
இதழ்: 9
புரட்டாதி 1984
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இரண்டாவது சபை உதவாது

இலங்கையின் தமிழர் பிரச்சினை முழு நாட்டிற்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய, கழுத்தளவுக்கு வளர்ந்து விட்ட ஒரு தேசியப் பிரச்சினையாகியுள்ளது. இத்தகைய நிலையில் அதன் தீர்வுக்கென அரசாங்கம் முன்வைத்திருக்கும் இரண்டாவது சபை என்ற முடிவு பிரச்சினையின் எந்தவொரு அம்சத்தையும் தீர்த்து வைக்கக்கூடிய ஒன்றாக இல்லை.

தமிழர் பிரச்சினையின் தீர்வுக்கென சர்வகட்சி மாநாடு கூட ஆரம்பித்து கிட்டத்தட்ட ஒருவருடமாகப் போகின்றது. இப்பொழுது தான் அரசாங்கம் இரண்டாவது சபை என்ற ஒன்றைக் கண்டுபிடித்து அதைத் தனது தீர்வாக முன்வைத்துள்ளது. அதே வேளை நாட்டு நலன் விரும்பும் நல்ல சக்திகள் அனைத்தும் முன்வைத்த கருத்துக்களும், ஆலோசனைகளும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இரண்டாவது சபையானது ஏற்கனவே செயலிழந்து, பிரயோசனமற்று வெறும் பெயர்ப்பலகையாக உள்ள மாவட்ட சபைகளை மறுசீரமைத்து அதன் அடிப்படையிலே செயல்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மாவட்ட சபையும் அதனின்று உருவாகும் இரண்டாவது சபையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணமுடியும். தமிழ் மக்களுக்கு இன்று தேவைப்படுவது அர்த்தமற்ற சபைகளோ பதவி, பட்டங்களோ அல்ல. அவர்கள் இந்த நாட்டில் தமது மொழி, கலாசாரம், பொருளாதாரம், பாரம்பரிய பிரதேசங்கள் ஆகியவற்றின் தனித்துவத்தைப் பாதுகாத்து வாழவும், சிறுபான்மையோர் என்ற அடிப்படையில் எவ்வகையான பேரினவாதத் திணிப்புகளோ அன்றி அடக்குமுறைகளோ இன்றி தன்மானத்துடன் வாழவுமே விரும்புகிறார்கள். தமிழ் மக்களின் நியாயமான இவ் விருப்பம் ஒருபோதும் தவறாகாது. இவ் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கவல்ல ஒரு அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் மட்டுமன்றி நேர்மையான நாட்டு மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள்.

## பிரதேச சுயாட்சியே தகுந்த பரிகாரம்

ஆனால் அரசாங்கம் என்ன செய்கிறது: பசியால் அழும் குழந்தைக்கு உணவு கொடுப்பதற்குப் பதிலாக விளையாட்டுப்பொருள் கொடுத்து ஏமாற்ற முனைகிறது. அரசியல் தீர்வுபற்றி ஜனாதிபதி தொட்டு அமைச்சர்கள், எம்பீக்கள் வரை நன்றாக வாய்ப்பந்தல் போடுகிறார்கள். அதே வேளை நடைமுறையில் ராணுவ நடவடிக்கைகளை விஸ்தரித்து ''பயங்கரவாதத்தை ஒழிப்பதே இன்றுள்ள முதற் கடமையென'' செயலாற்றி வருகிறார்கள். இது நாட்டையும் மக்களையும் எங்கு கொண்டு சென்று விடப் போகிறது என்ற அச்ச உணர்வை தேசநலன் வேண்டுவோர் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

எமது கட்சியும் ஏனைய ஜனநாயக முற்போக்கு சக்திகளும், தமிழ்—சிங்கள மக்கள் நியாயமான தீர்வாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரதேச சுயாட்சி முறை தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளன. அந் நியாயமான தீர்வுக்கான யோசனை அரசினால் செவிமடுக்கப்படவில்லை, அரசாங்கத்திற்குள் உள்ள பேரினவாதிகளும், வெளியே உள்ள தீவிர மதவாதிகளும் மாவட்டசபை அமைப்புக்கு மேலால் எதுவும் வழங்கப்படக்கூடாது என்றே வற்புறுத்துகின்றனர். இந்த ஒரு பக்க வற்புறுத்தலைக் கடந்து செல்ல முடியாது உள்ளதாலேயே ஆட்சியினர் மாவட்ட சபையுடன் சேர்த்து இரண்டாவதுசபை என்ற ஒரு தோற்றத்தைக் காட்ட முற்பட்டுள்ளனர். இது தமிழர் மத்தியில் மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியிலும் எவ்வித ஆதரவையும் உருவாக்கவில்லை என்பதை பல வழிகளிலும் காணமுடிகிறது.

மாவட்டசபை மறுசீரமைப்போ, இரண்டாவது சபையோ தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வாக இருக்கமுடியாது என்பதை சகல இன மக்களும் உணருகின்றனர். அவர்களது உணர்வை அரசியல் கட்சிகளும், பொது ஸ்தாபனங்களும் வெளிப்படுத்தி வருகின்றன. இதை கவனத்தில் கொண்டாவது அரசாங்கம் தனது இரண்டாவது சபை என்ற பெயரளவுக்கான முடிவைக் கைவிட வேண்டும். அதேவேளை நியாயமான தீர்வாக வரக்கூடியதும் தமிழ் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான பிரதேசசுயாட்சிக்கான முடிவை அரசியல் தீர்வாக முன்வைக்க முன்வரவேண்டும். இதுவே நாட்டையும் மக்களையும் எதிர்நோக்கியுள்ள இன்றைய இக்கட்டான நிலைக்கு சிறந்த பரிகாரமாகும். இதைவிடுத்து கெடுகுடி சொற்கேளாது என்பதற்கிணங்க அரசு செயல்படுமானால் அதனால் வரும் விளைவுகளுக்கு அவர்களேபொறுப்புதாரிகளாவர்.

★

# வடக்கின் அபிவிருத்தியை நிறுத்த அரசுக்கு என்ன உரிமையிருக்கிறது?

வடபகுதிக்கான அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் என்பதே ஒப்பீட்டு வகையில் மிகக் குறைவானவையாகும். அவ் விரல்விட்டு எண்ணக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தவும், அப்பணத்தைப் பாதுகாப்புச் செலவுக்குப் பயன்படுத்தவும் அரசு எடுத்த தீர்மானம் மிகவும் வெட்கக்கேடானதாகும். இது யாழ்ப்பாண மக்களைப் பற்றி எனக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்று ஏற்கனவே ஜே. ஆர். கூறிய கூற்றின் மற்றொரு வளர்ச்சியாகும்.

இதில் இரண்டு விஷயங்கள் இருப்பதைக் காணமுடிகிறது. ஒன்று வடபகுதியில் வாழும் மக்கள் இந்த அரசின் கட்டுப் பாட்டிற்குள் அடங்கும் பிரஜைகள் அல்லர்—தனியே ஆயுதப்படையினர் மட்டுமே இந்த அரசின் பிரஜைகளாவர் என்பதாகும். இரண்டாவது, வடபகுதி மக்களின் அபிவிருத்திக்கான பணத்தை ஆட்சியினர் எங்கிருந்து பெற்றுக் கொண்டவர்கள். வடபகுதி மக்களிடம் இருந்து எவ்விதப் பணத்தையும் பெறவில்லையா? என்பதாகும்.

இந்த இரண்டு விஷயங்களையும் பார்க்கும்போது அரசின் தீர்மானம் எவ்வளவு மோசமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். வடபகுதி மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. அவர்கள் நாளாந்தம் இந்த அரசிற்கு நேர்முக மறைமுக வரிகளைச் செலுத்திய வண்ணமே இருக்கின்றனர். ஒருகையால் மக்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு மறுகையால் அவர்களது தேவைகளை மறுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துவது கொடூரமான கொள்ளைத்தனமாகும். இது இந்த ஆட்சியின் அவலட்சணத்தின் உச்ச கட்டமாகும்.

பேரினவாத வெறி கொண்டலையும் ஆட்சியினருக்கு இப்படியான துர்க்குண முடிவு எடுக்க எந்தப் பிசாசுக் கூட்டம்தான் ஆலோசனை கூறியதோ தெரியவில்லை. அமெரிக்கப் பேய்களா அன்றி இஸ்ரேலியப் பிசாசுகளா? அவர்களை அதிகம் குறை கூறி என்ன பயன்—ஆலோசனையைப்பெற மண்டியிட்டு நிற்

6-ம் பக்கம் பார்க்க

### குண்டசாலை மின்னேரியா தேர்தலில் யூ. என். பி.யை

# தோற்கடிக்க வேண்டும்!

எதிர்வரும் அக்டோபர் 25ம் திகதி குண்டசாலை மின்னேரியா தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெற உள்ளன. ஆளும் கட்சியைப் பற்றிய மக்களின் நிலை என்ன என்பதை அறிய இவ் இடைத் தேர்தல் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று சில அரசியல் அவதானிகள் நம்புகிறார்கள். ஆனால் தேர்தல் நியாயமான முறையில் நடைபெறுமா? என்பதே பலரது கேள்வியாக உள்ளது. இந்த அரசின் கீழ் நாடு தழுவிய ரீதியில் நடத்

(6-ம் பக்கம் பார்க்க)

# குளத்தைக் கலக்குகிறார் ஜே. ஆர்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் சூரியா என்னும் பத்திரிகை வெளியிட்ட கட்டுரை ஒன்று அண்மையில் இந்தியாவிலும் இலங்கையிலும் அதிக சர்ச்சையைக் கிளப்பியது. அக்கட்டுரையின் சாராம்சம் மிக விரைவில் இந்தியா இலங்கைமீது ஒரு படையெடுப்பை நடத்தவுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. அதற்கான ஆதாரங்களையும், பெயர் விபரங்களையும், மூன்றும் படை என்ற விஷேட உளவு ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளையும் அக்கட்டுரை வெளியிட்டிருந்தது.

இக் கட்டுரை கிளப்பிய சர்ச்சைக்கு இந்தியாவின் சார்பாக சில மொட்டையான மறுப்பு மட்டுமே தெரிவிக்கப்பட்ட போதிலும் விஷயத்தின் பாரதூரத்தன்மையை எவரும் குறைக்கவோ மறுக்கவோவில்லை.

இந்தியா தன்தேவை கருதி இலங்கைமீது படையெடுப்பு ஒன்றை நடத்தி தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்த சமயம் பார்த்திருந்து வருகின்றது என்பது இரகசியத்திற்குரிய தொன்றல்ல. இதற்கு இந்தியாவின் கடந்த காலப் போக்குகள் சான்று பகரும். சுதந்திரத்திற்கு பின் அண்டை அயல் நாடுகளுடன் நடத்திய யுத்தங்களில் இந்தியா இரண்டு நோக்கங்களை ஒரேநேரத்தில் அடைய முயன்று வந்துள்ளது. ஒன்று தென்னாசியாவில் தனது தலைமை ஆதிக்கத்தை நிலை நாட்டுவது. இரண்டாவது தனது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் திசைதிருப்புவதாகும்.

தற்போதைய நிலையிலும் இந்தியாவிற்கு ஒரு படையெடுப்பு அவசியமானதொன்றாகவே தென்படுகிறது. சூரியாப் பத்திரிகையின் கட்டுரை சுட்டிக்காட்டுவது போல் அப் படையெடுப்பு இலங்கை மீது இடம்பெறலாம். அதற்கான காரணம் கற்பிக்கப்படுவதற்கு இலங்கையின் இனப் பிரச்சினை இந்தியாவிற்குப் போதுமானதாகவே உள்ளது.

இலங்கை மீதான இந்தியப் படையெடுப்புக்கு வழிகோலும் வகையில் இலங்கை அரசும் அதன் தலைவர் ஜே. ஆரும் நடந்து வருகின்றனர்- இனப் பிரச்சினையின் தீர்வின்மையை மேன்மேலும் சிக்கலாக்கி அரசியல் தீர்வை நியாயமான வழியில் கொண்டுவருவதற்குப் பதிலாக அமெரிக்க, இஸ்ரேல் ஆலோசனையுடன் ராணுவ நடவடிக்கையை விஸ்தரித்து வருகிறார்கள். இலங்கையின் சுதந்திரமும், இறைமையும் எக்கேடுபட்டாலும் பரவாயில்லை அமெரிக்க ஆதிக்கத்தை இலங்கையின் சகல அம்சங்களிலும் நிலைநிறுத்தவும், பேரினவாத வெறிக்கு உரமிடவுமே இனப்பிரச்சினையை தீர்க்க அரசு பின்வாங்குகின்றது. இது குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரைகொடுக்கும் நிலைக்கு ஒப்பானதேயாகும்.

இந்தியப் படையெடுப்பு என்ற நிலை பகிரங்கத்திற்கு வந்துள்ள இவ்வேளையிலாவது அத்தகைய நிலைக்கு காரணமாகக் காட்டப்படும் இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை அரசு நாடவேண்டும். அர்த்தமற்ற சுற்றி வளைத்த நியாயங்களைக் கூறி சாட்டுப் போக்குச் சபைகளை நிறுவுவது பற்றி வெறுமனே காலத்தைக் கடத்தாது தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான தீர்வுக்கு ஜே. ஆர். ஆட்சி வருமா? அல்லது இலங்கையின் சுதந்திரம் இறைமை என்பனவற்றுக்கு நாசத்தைத் தேடிக் கொடுப்பார்களா? இரண்டில் ஒன்றைத்தான் செய்யமுடியும். ஜே. ஆரும் ஆட்சியும் எதைச்செய்யப் போகிறார்கள் என்பதையே மக்கள் எதிர்பாக்கின்றனர்.

★

# மக்களுக்காக இயக்கங்களா? இயக்கங்களுக்காக மக்களா?

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமஞானி

இன்று வடக்கு கிழக்கில் அரச பயங்கரவாதம் தன் கைவரிசையைக் காட்டி வருகின்றது. விலைமதிப்பற்ற மனித உயிர்கள் கேள்வி நியாயமின்றிப் பறிக்கப்படுகின்றன. நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் நித்திரையிலேயே கொல்லப்பட்ட கொடூரம் கல்நெஞ்சர்களையும் ஒருகணம் கவலைகொள்ளச்செய்யும். வவுனியாவில் பதினாறு பஸ் பிரயாணிகள் காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இப்படி நாளாந்தம் கொலைவெறியாட்டம் நடக்கவே செய்கின்றன. ஆனால் தார்மீகத் தர்மவான்களுக்கு இவையாவும் பயங்கரவாத ஒழிப்புக்குள் அடங்கிவிடுகிறது. எய்தவர்களும், எய்த அம்புக்குரியவர்களும் அவர்கள்தானே. அப்போது அந்தப் புண்ணியவான்களுக்கு கவலைகொள்ள என்னதான் உண்டு?

தமிழ் மக்கள் ஒரு புறம் அரச பயங்கரவாதத்திற்கு அஞ்சி ஒடுங்கி வாழவேண்டியும் மறுபுறத்தில் கட்டவிழ்த்துவிடப்படும் அராஜக சம்பவங்களால் பாதிக்கப்பட்டு இதுதானா போராட்டம் என்று விரக்தி கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் நாளாந்தம் இடம்பெறும் கொள்ளைவகைகள் ஏராளம். இக் கொள்ளைகள் யாவும் இயக்கங்களின் பெயரிலேயே இடம்பெறுகின்றன. வழிப்பறி தொடக்கம் வங்கிக்கொள்ளை வரை இயக்கங்களின் பெயரால் நடைபெறுகின்றன, இவையாவும் உங்களுக்காகவே செய்யப்படுகிறது என்றே கூறப்படுகிறது. யாராவது சரிபிழை, நீதி நியாயம் கேட்க முற்பட்டால் துப்பாக்கி காட்டப்படுகிறது. அப்படியானால் அரசின் துப்பாக்கிகளுக்கும், இயக்கங்களின் துப்பாக்கிகளுக்கும் என்ன வித்தியாசம் என்றே மக்கள் கேட்கிறார்கள்.

இதேபோல் ஹர்த்தால், கடையடைப்பு, பகிஷ்கரிப்பு போன்றனவும் நினைத்த நினைத்த படியாக இடம்பெறுகின்றன. கண்டனம், எதிர்ப்பு அரசுக்கு எதிராக நடத்தப்படவேண்டும். அதில் யாருக்குமே அபிப்பிராய வித்தியாசம் கிடையாது. ஆனால் எல்லோரும் ஒன்றுபட்டு மக்கள் நலனை, மாணவர் நலனை பாதிக்காத விதத்தில், ஏற்கனவே நொந்து போன மக்களை மேலும் வெறுவிலிகளாக்காத விதத்திலேயே யாவும் நடத்தப்படவேண்டும். அதை விடுத்து யாழ் குடாநாட்டிற்குள்ளேயே ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நடவடிக்கைக்கு வெவ்வேறு நாட்களைத் தெரிவு செய்வதோ, முன்னறிவித்தலை எல்லோரும் சேர்ந்து கொடுக்காது நினைத்த நினைத்தமாதிரி ஒவ்வொன்றைச் செய்ய முனைவதோ அரசுக்கு எதிரான உருப்படியான கண்டனமாக எதிர்ப்பாக இருக்கமுடியாது.

மொத்தத்தில் தமிழ்மக்கள் மத்தியில் பல பக்கங்களாலும் ஒரு அராஜகநிலை தோற்றுவிக்கப்பட்டு அதுவே போராட்டத்தின் உச்சகட்டம் என்று சொல்ல எவராவது முற்பட்டால் அவர்கள் போராட்டம் பற்றியும், மக்கள் பற்றியும் தப்புக் கணக்கு போடுபவர்களாக மட்டுமே இருப்பார்கள்.

நாளாந்தம் ஒவ்வொரு புதுப் புதுப் பெயரில் இயக்கங்கள் தத்தமது பெயர்களை வெளிக் காட்டிவரும் இவ்வேளை மக்களின் நலன்கள் எவ்வளவிற்கு கவனத்தில் எடுக்கப்படும் என்பதே தமிழ் மக்கள் மத்தியில் எழும் கேள்வியாகும். எந்த இயக்கமாவது ஒரு சிறு பகுதியினரது அல்லது வசதி படைத்த இளைஞர்கள் சிலரது தேவைகளில் இருந்து விஷயங்களை அணுகாது மக்களின் நலன்களில், தேவைகளில் இருந்து எதையும் அணுகுவதே ஆரோக்கியமானதாகும். அதுவே இன்று எழுந்துள்ள மக்களுக்காக இயக்கங்களா அன்றி இயக்கங்களுக்காக மக்களா? என்ற கேள்விக்கு பதிலாக அமைய முடியும்.

★

# ஆந்திராவும் இந்திராவும்

இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றான ஆந்திராவில் இடம் பெற்ற சட்டசபைக் கலைப்பும், அதனைத் தொடர்ந்து வெடித்த மக்கள் இயக்கமும், அதற்கு முகம் கொடுக்க முடியாத இந்திரா காந்தி அரசு மீண்டும் பதவி பறிக்கப்பட்ட ராமராவ் விடமே ஆட்சியை ஒப்படைத்த சம்பவங்களும் நடைபெற்று முடிந்துவிட்டன. அநீதியான முறையில் ஆட்சி பொறுப்பில் இருந்து இந்திரா காந்தியால் அகற்றப்பட்ட தெலுங்கு தேசக் கட்சியையும் அதன் தலைவரையும் ஆந்திர மக்கள் தமது ஒன்றுபட்ட எழுச்சியால் மீண்டும் ஆட்சி பீடத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இது இந்திய வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவமாகும். இதுபற்றி இலங்கைத் தமிழ்த் தினசரி ஒன்று எழுதுகையில் ஆந்திர மக்களின் எழுச்சியையும் அவர்கள் பறிக்கப்பட்ட ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க நடத்திய போராட்டத்தையும் பாராட்டி எழுதியது. ஆனால் யார் அநீதியான முறையில் ஆந்திரா ஆட்சியைப் பறித்தார்கள் என்பதை மட்டும் அப்பத்திரிகைக்கு கூற மனம்வராது போயிற்று. இந்திராகாந்தி அநீதியான முறையில் ஆந்திராவின் ஆட்சியைப் பறித்த சர்வாதிகாரி என்றுகூற சிலருக்கு மனம் கஷ்டமானதொன்றே தான்.

ஆனால் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை ஜனநாயகம் என்று கூறி மக்களை அடக்கி ஆளும் இந்திரா காந்தி போன்றவர்களுக்கு பல்வேறு முகங்கள் உண்டு என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்கள் தேவையானபோது தேவையான முகத்துடன் செயல்படுவார்கள். அதைப்பற்றி அவர்களுக்கோ அல்லது அவர்களின் அடிவருடிகளுக்கோ வெட்க துக்கம் கிடையாது.

சில மாதங்களுக்கு முன்பு ஜம்மு காஷ்மீரில் பாரூக் அப்துல்லாவின் ஆட்சியை குழிபறித்து வீழ்த்தி வெற்றி கண்டதுபோல் ஆந்திராவிலும் வெற்றிபெறலாம் என்றே இந்திராகாந்தி கனவு கண்டார். ஆனால் அவரது சூழ்ச்சிகள் ஆந்திராவில் அதிகம் விலைபோகவில்லை. மக்கள் பதிலடி கொடுத்தார்கள். இந்திராகாந்தி மூக்குடைபட்டதைத் தவிர வேறு எந்த லாபத்தையும் ஆந்திராவில் அடைய அவரால் முடியவில்லை. மக்கள் எழுச்சியின் சக்தியை இந்திராவிற்கு உணர்த்திய ஆந்திர மக்களின் எழுச்சி ஜனநாயக முகமூடி அணிந்த சர்வாதிகாரிகளுக்கு தகுந்த படிப்பினையாகும்.

★

# நாய் வாலை நிமிர்த்தினாலும் தமிழ்த் தலைமையை மாற்ற முடியாது.

நாய்வாலை நிமிர்த்த முடியாது என்பது போலத் தமிழ்த் தலைமையின் பிற்போக்குத் தனத்தை ஒரு போதும் மாற்றமுடியாது. முழுத் தமிழ் இனத்திற்கும் அபாயநிலை வந்தாலும் கூட தமிழ்த் தலைவர்கள் தமது பிற்போக்கு நிலைப்பாட்டை கைவிட மாட்டார்கள்.

எதிர்வரும் மின்னேரியா, குண்டசாலை தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களைப் பற்றி அபிப்பிராயம் கூறிய அமிர்தலிங்கம் அதைப்பற்றித் தமக்கு எவ்வித இக்கறையும் இல்லை என்று கூறியுள்ளார், இது தற்செயலான கூற்றோ அன்றி இன்றைய நிலையில் முன்வைக்கும் கருத்தோ அல்ல. இது அவர்களின் நீண்டகால அரசியல் பிற்போக்குத் தனத்தின் தன்மையாகும்.

தென்னிலங்கையில் நடைபெறும் வேலைநிறுத்தம் என்றாலும் சரி, தொழிலாளர், மாணவர் போராட்டம் என்றாலும் சரி அதில் தமக்கு அக்கறை இல்லை என்று கூறிவிடும் வழக்கம் தமிழ் தலைமைக்கு உண்டு. இப்படிக்கூறி சிங்கள—தமிழ் மக்களின் பொதுப் போராட்ட ஐக்கியத்தைச் சிதறடிப்பதே அவர்களின் உள்நோக்கம். ஆனால் தமது பிற்போக்கு நிலைக்கு உதவக்கூடிய எதற்கும் தென்னிலங்கையில் ஆதரவு கொடுப்பார்கள். 77க்கு முன்பு யூ. என். பி நடத்திய சத்தியாக்கிரகத்திற்கு கூட்டணி முழு ஆதரவு கொடுத்து அதில் பங்கும் கொண்டனர், ஜே. ஆருக்கு வாக்களித்து உதவிசெய்தனர். இப்படிப் பல சம்பவங்கள் கூறலாம், ஏன் ஜனாதிபதித் தேர்தலில் பஷ்கரிப்பு, அக்கறை இல்லை

(6-ம் பக்கம் பார்க்க)

வசந்தம் புத்தக நிலையத்தில் விற்பனையாகிறது

★ இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை 1-00
★ On the National Question in Sri Lanka 1-00
★ தாயகம் (ஆகஸ்ட்-செப்டெம்பர்) இதழ் 5-00
★ செம்பதாகை - புரட்டாதி இதழ் 1-50

சீன சஞ்சிகைகளுக்கு 1985-ம் ஆண்டிற்கான சந்தாக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

வசந்தம் புத்தக நிலையம்
374 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதி நாட்டைக் குட்டிச்சுவராக்கி வருகிறது

கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதிக் கொள்கையை இந்த அரசு அமுல்படுத்த ஆரம்பித்தபோது நாட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருந்தது. அதற்கு ஒரு காரணம் முன்னைய அரசாங்க காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு இருந்து வந்த இறக்குமதிக் கட்டுப்பாடும் அதனால் ஏற்பட்ட கடுமையான தட்டுப்பாடுமாகும். மக்கள் அனுபவித்துவந்த பொருட்தட்டுப்பாட்டுக் கஷ்டத்துக்கு யூ. என். பியின் தாராள இறக்குமதிக் கொள்கை ஒரு வரப்பிரசாதம் போலவே மக்களுக்கு தென்பட்டது. ஆனால் காலப்போக்கில் அதுவே முழு நாட்டையும் குட்டிச்சுவராக்கி அந்நிய முதலாளிகளையும் உள்நாட்டுப் பெருச்சாளிகளான பெரும் முதலாளிகளையும் கொழுக்கவைத்து விடும் என்பதை அன்று மக்களால் உணரமுடியவில்லை.

இன்று மக்கள் இந்த தாராள இறக்குமதியின் பன்முகப் பாதிப்புகளை அனுபவிக்கின்றனர். தம் முன்னே தாராளமாக அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி தமது அன்றாடத் தேவைக்கு உதவாத ஆடம்பரப் பொருட்கள் யாவும் குவிந்து கிடைப்பதைப் பார்க்கின்றனர். மக்களிடம் வாங்கும் சக்தி என்பது கிஞ்சித்தும் கிடையாது. அவர்கள் பொருட்களைப் பார்த்துச் செல்லும் ரசிகர்கள் போலவே உள்ளனர்.

தேசிய பொருளாதாரம் எந்த வகையிலும் ஸ்திரமடையவில்லை. வெளிநாட்டு இறக்குமதி என்பது எமது நாடுபோன்ற ஒரு மூன்றும் உலக நாட்டிற்கு முற்றிலும் மறுக்கப்படக் கூடிய காரியமன்று. அதேவேளை தேசிய பொருளாதாரத்தின் சுதந்திர வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய எந்த இறக்குமதியையும் நம்நாடு போன்ற எந்தவொரு நாடும் அனுமதிக்க முடியாது. அது மட்டுமன்றி நமது நாட்டு மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், சீதோஷ்ண நிலை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை துளியளவும் கணக்கில் கொள்ளாது அந்நிய முதலாளிகட்கு பணத்தை வாரி இறைப்பதை நோக்காகக் கொண்ட ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி எவ்வகையிலும் ஏற்றுக் கோள்ளக்கூடிய ஒன்றல்ல.

இன்றைய கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதிக் கொள்கையும், தேசிய பொருளாதரத்தின் வீழ்ச்சியும் நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பொருட்களின் விலைகள் உச்சத்திற்கு சென்றுள்ளன. விலைவாசி உயர்வுக்கு ஏற்ற சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அண்மையில் தொழிற் சங்கங்கள் இன்றைய வாழ்க்கை செலவின் அதிகரிப்பைக் கணக்கில் கொண்டு 1000 ரூபா சம்பள உயர்வு வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன. சம்பள உயர்வு அரசினால் பிடிவாதமாக மறுக்கப்பட்டு வருகின்ற அதேவேளை வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு வாயு வேகத்தில் உயர்ந்து செல்கின்றன. இவை யாவும் கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதிக் கொள்கையின் விளைவுகளேயாகும்.

இன்னொரு புறத்தில் இத் தாராள இறக்குமதிக் கொள்கை உள்நாட்டு உற்பத்தியாளர்களை நாசத்திற்கு உள்ளாக்கி அவர்களை ஓட்டாண்டியாக்கி விட்டுள்ளது. நாட்டின் புடவை உற்பத்தி, பிரதான பாவனைப் பொருட்களின் உற்பத்தி, உப உணவு உற்பத்தி போன்ற யாவும் தாராள இறக்குமதிக் கொள்கையால் குப்புற வீழ்த்தப்பட்டுள்ளன. கிராமிய மட்டத்தில் ஓரளவுக்கு வளர்க்கப்பட்டு வந்த குடிசைக் கைத்தொழில்கள் இருந்த இடம் தெரியாது மறைந்து வருகின்றன. இதனால் கிராமிய மக்களும், உள்நாட்டு உற்பத்தியால் பயனடைந்த பெரும்பாலான மக்களும் என்றுமில்லாதவாறு நலிவடைந்துள்ளனர்.

தாராள இறக்குமதியால் ஏற்பட்டிருக்கக் கூடிய கடுமையான பாதிப்பை மிகச் சிறு அளவில் தானும் தாக்குப்பிடிக்கக் கூடிய நிலை வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளவர்களுக்கு மட்டுமே இயலுமானதாகவுள்ளது. அதுவும் இன்று இலங்கையின் அரசியல் சூழ்நிலையில் எவ்வளவு காலத்திற்கு என்பது கேள்விக்குரிய தொன்றேயாகும்.

உற்று அவதானித்தால் கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதி என்பது அந்நிய முதலாளிகளுக்கும், உள்நாட்டுப் பெரு முதலாளிகளுக்கும் கொள்ளைலாபம் சம்பாதிக்க தங்குதடையற்ற பாதையைத் திறந்து விட்டுள்ளது. அது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

★

## களம் பல கண்ட முதுபெரும் கம்யூனிஸ்ட் தோழர்

# டாக்டர் சு. வே. சீனிவாசகம் அவர்களை

## இளம் சந்ததியினருக்கு அறிமுகம் செய்கின்றோம்

களம் பல கண்ட முதுபெரும் கம்யூனிஸ்ட் தோழர் டாக்டர் சு. வே. சீனிவாசகம் அவர்களை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தோம். கடந்த 12-9-84ல் அவருக்கு வயது 75 ஆகிறது. உடல் சற்றே தளர்ந்து, கண் பார்வை சிறிது குறைத்திருந்தது, ஆனாலும் அவரது கம்பீரமான தோற்றமும், உறுதியான குரலில் ஒலித்த கொள்கைப் பிடிப்பும் இளம் சந்ததியைச் சேர்ந்த எமக்கு உற்சாகமூட்டி நின்றன.

யாழ் மண்ணுக்கு முதன் முதலாகக் கம்யூனிசக் கருத்துக்களைக் கொண்டுவந்தவர் மறைந்த தோழர் மு. கார்த்திகேசன். அவரது அன்றைய முயற்சிகளுக்கு துணிந்து தோள் கொடுத்தவர்களில் டாக்டர் சு. வே. சீனிவாசகம் முதன்மையானவர். ராமசாமி ஐயர், ஏ. கே. கந்தையா, குலவீரசிங்கம் புகையிரதநிலையத்தடியின் கதிரேசுவின் தேனீர்க்கடை, அவரது மகன் போன்றவர்களின் ஆரம்பகால நடவடிக்கைகளை இன்றும் டாக்டர் சீனிவாசகம் நினைவு கூருகின்றார்.

அவர் தனது ஆரம்பகால கட்சி நடவடிக்கைகளையும், மக்கள் சேவைகளையும் இளம் சந்ததிக்கு பயன்படுமாறு எடுத்துக் கூறினார். பிரபுத்துவத்தின் இறுக்கமான பிடிக்குள் இருந்த அன்றைய யாழ்ப்பாணத்தில் கம்யூனிசக் கருத்துக்களைக் கொண்டு செல்வது மிகக் கடினமாகவே இருந்தது என்றும் தாங்கள் இக்கடினம[illegible]பை உற்சாகமாகச் செய்[illegible] வந்த[illegible]யும் விபரித்துக் கூறினார்.

இந்தியாவில் கல்வி கற்று ஒரு காந்தீயவாதியாக கதர் உடையுடன் யாழ்ப்பாணம் வந்த தான் விரைவிலேயே காந்தியக் கொள்கை சரிவராது என்பதை உணர்ந்து கம்யூனிசக் கொள்கையின் மீது நாட்டம் கொண்டு கார்த்திகேசனோடு சேர்ந்து மாக்சிச வாதியாகினேன். ஆனால் இன்றும் கதர் உடையை மட்டும் கைவிடவில்லை என்று கூறிய டாக்டர் சீனிவாசகம் தனது ஆரம்பகால கட்சிவேலைகளை சமுதாயத்தில் நலிந்துபோய் இருந்த சாதாரண மக்களுக்கு சேவை செய்வதில் இருந்தே ஆரம்பித்ததாக எடுத்து விளக்கிக் கூறினார்.



மயிலிட்டி கிராமசபைக்கு கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வசதியும், அதிகாரமும் படைத்தவர்களின் பலத்த எதிர்ப்புக்கள் மத்தியில் வெற்றியீட்டியதையும், அதன் மூலம் கஷ்டப்பட்ட மக்களுக்கு குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டு கிணறுகளை ஏற்படுத்திக் கொடுத்த அனுபவங்களையும் கூறினார். அதன் பின்பு காங்கேசன் துறைப் பட்டின சபைக்கு கட்சியின் அபேட்சகராகப் பலதடவை போட்டியிட்டு வெற்றிபெற்று உபதலைவராக, தலைவராகச் சேவைசெய்த காலங்களையும் அக் காலகட்டத்தில் தமிழரசு—காங்கிரஸ் பிற்போக்குச் சக்திகள் தனக்கு எதிராக எடுத்த பிற்போக்குத்தன நடவடிக்கைகளையும் விபரித்தார்.

கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வந்தவர்களில் சிலர் தமது சுயநலத் தேவைகளையும், பட்டம், பதவிகளையும் நாடிச் சீரழிந்துபோன சரித்திரமும் உண்டு. ஆனால் மக்களுக்கு தன்னலியன்ற சேவையைச் செய்வதற்கென்ற திடசங்கற்பத்துடன் இறுதி மூச்சுவரை செயல்பட்டு வருபவர்கள் ஒருபோதும் தமது லட்சியத்தை விட்டு விலகுவதில்லை. தோழர் சீனிவாசகம் பொதுவாழ்வில் பல எதிர்ப்புகளையும், எதிராளிகளையும் சந்தித்திருக்கிறார். அவர் அத்தனையையும் ஒரு புரட்சிவாதிக்குரிய நிலையில் நின்று எதிர்த்து முறியடித்து முன்னேறிய ஒரு கம்யூனிஸ்டாகவே இருந்துவந்துள்ளார். அவரது குடும்பத்தில் பல புயல்கள் வீசியவேளையிலும் அவற்றை எல்லாம் முகம் முகம் கொடுத்து சமாளித்து தான் ஒரு உறுதியான கம்யூனிஸ்ட் என்பதை பொது வாழ்விலும், குடும்ப வாழ்விலும் நிலைநாட்டிய அனுபவங்கள் இளம் சந்ததியினருக்கு பயன் உள்ளவையாகும்.

1963ம் ஆண்டு நீர்வேலியில் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளுக்கு தீவைத்து அட்டகாசம் புரிந்தவேளை அவ் அநியாயத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு துணிவுடன் தலைமை தாங்கியவர் தோமர் சீனிவாசகம். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற 1966ம் ஆண்டு அக்டோபர் 21 ஊர்வலத்தில் பங்குகொண்டு பலத்த தாக்குதலுக்குள்ளாகியதுடன் அதன் பின்பு இடம்பெற்ற முற்றவெளிக் கூட்டத்திற்கும் தலைமை தாங்கினார்.

காங்கேசன்துறைப் பகுதியில் எங்கு மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டாலும் அந்த இடத்திலே தோழர் சீனிவாசகதிதைக் காணமுடியும். அதேபோல் சாதாரண மக்கள் தமது பிரச்சினைகளைப் பற்றி ஆலோசிக்க 'டாக்குத்தர் சீனிவாசகத்திடம் சென்றால்தான் சரிவரும்' என்று கூறி தோழர் சீனிவாசகத்தை நாடி வரும் மக்கள் தொகை அதிகம். ஒரே காரணம் அவரது தன்னலமற்ற மக்கள் சேவைதான். அதுதானே உண்மையான கம்யூனிஸ்டின் லட்சணமாக இருக்கமுடியும்.

அவருடனான சந்திப்பை முடித்துக்கொள்ளு முன் இன்றைய நிலைபற்றி அவர் மிகவும் சாதாரணமாகவே கூறிய கருத்துக்கள் ஒரு கம்யூனிஸ்ட்டின் உறுதியான கொள்கைப் பிடிப்பை எடுத்துக் காட்டின. அரசாங்கம் மிக மிகக் கொடூரமாக நடந்து கொள்கின்றது. இதற்கு சரியான போராட்டப் பாதை வேண்டும். சரியான தலைமை வேண்டும். சரியான தலைமை சரியான கொள்கையில் இருந்தே உருவாக முடியும். ஏதோ இப்பொழுது செய்கிறார்கள். இது எவ்வளவிற்கு வெற்றி பெறும் என்று சொல்லமுடியாது. உண்மையான மக்கள் போராட்டம் இன்றி இன்றைய நிலைமையை மாற்ற முடியாது என்று இரத்தினச் சுருக்கமாக இன்றைய நிலை பற்றிக் கூறிய தோழர் சீனிவாசகம் கட்சியின் இளம் சந்ததி உறுதியுடனும், உற்சாகத்துடனும் நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி வேகமாக வேலை செய்யவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். செம்பதாகைப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு தனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

★

தோழர் டாக்டர் சு. வே. சீனிவாசகம் அவர்களின் 75-வது வயது நிறைவையிட்டு செம்பதாகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த இரண்டு தோழர்கள் அவரைச் சந்தித்து உரையாடினர். அதன் சுருக்கத்தை இங்கு தருகின்றோம். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் தோழர் சீனிவாசகத்தின் இல்லத்திற்குச் சென்று கட்சியின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

# சோஷலிசப் பாதையில் முன்னேறும் சீனமக்கள்

## மேலாதிக்கத்தை எதிர்த்து உலக சமாதானத்திற்கு அறைகூவல்!

## ★ அக். 1 சீனாவின் 35-வது ஆண்டு நிறைவு தினம் ★

மாபெரும் ரஷிய அக்டோபர் புரட்சிக்குப் பின்பு இந்த நூற்றாண்டு சந்தித்த இரண்டாவது மகத்தான புரட்சி சீனப் புரட்சியாகும். இது உலக சனத்தொகையில் அதிக எண்ணிக்கையுடைய ஒரு நாட்டில் இடம்பெற்ற காரணத்தால் மட்டுமன்றி பின்தங்கிய, அடிமைப்பட்ட கீழைத்தேச நாடுகளில் ஒன்றான சீனாவில் நடைபெற்றதினாலும் சீனப்புரட்சிக்கு பன்முக முக்கியத்துவம் உண்டு.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருபத்தியெட்டு ஆண்டுகள் இடையிறாத புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே சீனப்புரட்சி வெற்றி கொள்ளப்பட்டது. 1949ம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி சீன மக்கள் குடியரசு உலகிற்கு பிரகடனம் செய்யப்பட்டது.

சீனப் புரட்சியின் இயக்க சக்தியாகத் திகழ்ந்தவர்கள் தொழிலாளர், விவசாயிகளான சீன மக்களாவர். அவர்களைத் தட்டி எழுப்பி, அடிமைத்தனத்தின் அம்சங்களை விளக்கிக் காட்டி, சீனாவின் எதிர்கால எஜமானர்கள் அவர்களே என்பதை உணரச்செய்து, அவர்களைப் புரட்சிகரப்பாதையில் வழி நடத்தியது புகழ் மிக்க சீனக் கம்யூனிஸ்ட் கட்சியாகும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிசம் — லெனினிசம் என்ற பாட்டாளி வர்க்கத் தத்துவத்தை தனது நாட்டின் சொந்த அனுபவங்களால் கற்றுணர்ந்து அதன் அடிப்படையில் வகுக்கப்பட்ட கொள்கை வழிநின்றே சீனப் புரட்சியை வெற்றியீட்டச் செய்தது. சீனக் கம்யூனிஸ்டுகளின் புகழ் மிக்க வெற்றிக்கு தனது மதிநுட்பம் நிறைந்த பங்களிப்பைவழங்கியதோழர் மாஓ சீனவரலாற்றிலும் உலக வரலாற்றிலும் என்றென்றும் போற்றத்தக்கவர்.

சீன மக்களை அடக்கி அவர்களின் வாழ்வைச் சூறையாடி வந்த நிலப் பிரபுத்துவ, ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவக் கொடுமையாளர்களை ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் மூலம் தோற்கடித்தே தொழிலாளர்—விவசாயிகளின் அரசாக சீன மக்கள் குடியரசு உருவாக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளில் சீனாவின் சோஷலிச வளர்ச்சியானது கடும் சோதனைகளின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளது. 1949ம் ஆண்டில் சீனமக்கள் குடியரசு உதயமாகிய போதிலும் அந்த அரசின் தலைமையில் முழுமையான சோஷலிச உடமை மாற்றம் என்பது 1956ம் ஆண்டிலேயே பூர்த்தியடைந்து தனியுடமை முறையும், சுரண்டல் அமைப்பும் தகர்க்கப்பட்டு அவ்விடத்தில் சோஷலிச உடமைமுறை நிலைநிறுத்தப்பட்டது. சக்திக்கு ஏற்ற உழைப்பும், உழைப்புக்கேற்ற ஊதியமும் என்ற சோஷலிசக் கோட்பாடு சோஷலிச நிர்மானத்தினூடே அமுல் படுத்தப்பட்டது. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் சீனாவில் சோஷலிசத்தைக் கட்டியெழுப்பும் பாதையில் பல வெற்றிகளும் தோல்விகளும் சீன மக்களுக்கு கிடைத்துள்ளன. 1966ம் ஆண்டு தொடங்கி 1976ம் ஆண்டு வரையான பத்து ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட அதிதீவிர இடது மார்க்கமான கலாச்சாரப் புரட்சியால் சோஷலிச வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டதுடன் பாரதூரமான பின்னடைவுகளும் உருவாகின.

ஆனால் தனது சொந்தத் தவறுகளை எப்பொழுதும் சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்குவதிலும், உரியகாலத்தில் தவறுகளைத் திருத்திக்கொள்வதிலும் தனக்கேயுரிய தனித்துவத்தைக் கொண்ட புகழ் மிக்க சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது கலாச்சாரப் புரட்சியின் தவறுகளையும் உரிய காலத்தில் விமர்சனம் செய்து தவறுகளை நிராகரித்துக் கொண்டது. அத்துடன் இன்றைய சமகால உலகின் நிதர்சன நிலைமைகளைச் சரியானபடி கணக்கில்கொண்டு சீனாவின் சோஷலிசப் பாதையின் தன்மையையும் அதன் வளர்ச்சியையும் வரையறுத்தும் கொண்டது.

நூறுகோடி சனத்தொகையையும், பரந்த நிலப் பரப்பையும், பல்வேறு கனிவளங்களையும் கொண்ட சீனாவின் சோஷலிச வளர்ச்சிக்கு தற்போதைய நான்கு துறைகளிலான நவீன மயமாக்கல் கொள்கை புதிய உந்துதலைக் கொடுப்பதாகவே உள்ளது. இந் நவீன மயமாக்கும் கொள்கையானது இந்த நூற்றாண்டின் முடிவில் சீனாவை உலகின் முன்னேறிய சக்தி மிக்க சோஷலிச நாடாக்கும் குறிக்கோளைக் கொண்டதாகவே உள்ளது. இது அடிப்படையில் சோஷலிச சீனம் முழு மனிதகுலத்திற்கும் தனது பங்களிப்பை செலுத்தும் என்ற நம்பிக்கையையும் கொண்டுள்ளது.

இன்றைய உலகில் சோவியத் அமெரிக்க மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் உலக மேலாதிக்கத்திற்கான போட்டியில் வேகமாக முன்னேறி வருகின்றன. இதனால் உலகம் பெரும் அணுவாயுத யுத்தப் பீதிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அதனாலேயே சீனா மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டக் குரலை உரத்து ஒலிப்பதிலும், உலக சமாதானத்தை வற்புறுத்துவதிலும் முன்னணிப்பாத்திரம் வகிக்கின்றது.

கூட்டுத் தலைமையையும் கூட்டான முடிவுகளையும் சரியான விமர்சனம் — சுயவிமர்சனத்தையும் தனது பாரம்பரியமாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது தலைமைப் பாத்திரத்தை சீனாவின் சோஷலிச வளர்ச்சியில் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. அது மாக்சிசம் — லெனினிசம் — மாசேதுங் சிந்தனை என்ற தத்துவத்தை உயர்த்திப்பிடித்து தவறுகளையும், தீயனவற்றையும் நிராகரித்து சரியானவற்றையும், நல்லவைகளையும் முன்னெடுத்து வருகின்றது. அது முதிர்ந்த தலைவர்களின் ஆலோசனை வழிகாட்டலில் நடுத்தர வயதினரின் தலைமையில் இளம் தலைமுறையினரை சரியானபடி வளர்த்து வருகின்றது. இது எதிர்கால சோஷலிச வெற்றிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரத்தின் உறுதிப்பாட்டிற்கும் தகுந்த உத்தரவாதமாகும்.

இன்று 35வது ஆண்டு நிறைவைக் காணும் சோஷலிச சீனம் மேலும் பல வெற்றிகளை மெற்றெடுத்து உலகின் முன் சக்திமிக்க சோஷலிச நாடாகவும், உலக மக்களின் உற்ற நண்பனாகத்—தோழனாகவும் வளர வேண்டும்.

★

# திரிபுவாதம் என்றால் என்ன?

**அவதானி**

திரிபுவாதம் என்கிற வார்த்தை வழமையாக மாக்ஸிய இயக்கத்தில் வலது சந்தர்ப்பவாதத் தன்மை கொண்ட சில போக்குகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மாக்ஸியத்தின் அடிப்படையையே கொச்சைப்படுத்துமுகமான எந்தவிதமான திரிப்பையும் திரிபுவாதமென்று அழைக்கலாம் என்றாலும் வரலாற்றுக் காரணங்களால் திரிபுவாதமென்ற வார்த்தை இடது அதி தீவிரவாதம் மற்றும் ட்ரொட்ஸ்கிவாதம் போன்ற மாக்ஸியத்தின் கொச்சைப் படுத்தல்களைக் குறிக்கப் பயன்படுவதில்லை.

திரிபுவாதம் என்பது மாக்ஸியத்தின் தோற்றத்தினை அடுத்து மாக்ஸியச் சிந்தனையினதும் இயக்கத்தினதும் துரிதமானவளர்ச்சியை ஒட்டி ஏற்பட்ட ஒன்று. தங்களை மாக்ஸியவாதிகள் என்று அழைத்துக் கொண்ட சில சக்திகள் பூர்ஷுவா அரசியல் முறைக்கும் சமுதாய அமைப்புக்கும் தம் மறைமுகமான விசுவாசத்தை நிராகரிக்க முடியாமலும் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள முடியாமலும், தாம் மாக்ஸியத்தின் இறுதி இலட்சியங்களை ஏற்றுக் கொள்வதாகவும், மாக்ஸிய ஆய்வுடன் பூரண உடன்பாடுடையவர்கள் எனவும் கூறிக்கொண்டு மாக்ஸியப் போராட்டமுறைகள் வேலைமுறைகளில் பெரும் மாற்றங்கள் தேவை என்பதை வலியுறுத்தி வந்தார்கள். இத்தகைய போக்குகள் காலனித்துவ—ஏகாதிபத்திய அடக்குமுறைக்கு ஆதரவாக இருந்ததோடு தொழிலாளி வர்க்கப் போராட்டங்களைப் பாராளுமன்றப்பாதையில் முற்றாகத் திசை திருப்ப முனைந்து மீண்டும் மீண்டும் தோல்வியடைந்தவையே. ஆயினும் உலகின் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் திரிபுவாதம் (அதேபோன்று இடது தீவிரவாதம் மற்றும் பிற கொச்சைத் தனங்களும்) காலத்துக்குக் காலம் தலைதூக்கவே செய்தது.

ரஷ்யப்புரட்சியின் வெற்றியை அடுத்தும் சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் தவறான போக்குகள் இருந்து வந்த போதிலும், அடிப்படையில் மாக்ஸியப் போராட்ட முறையும் அரசியல், ஸ்தாபன வேலைமுறைகளும் ஆய்வு முறையும் திரிபுவாதத்தினதும் ட்ரொட்ஸ்கியத்தினதும் பிடியிலிருந்து சுதந்திரமானதாகவே இருந்தது. சோவியத் யூனியனில் உலக நிலவரங்களதும் உள்நாட்டு நிலவரங்களதும் நிர்ப்பந்தங்கள் காரணமாக ஸ்டாலினின் தலைமையில் சில தவறுகள் தேசிய ரீதியாகவும் சர்வதேசரீதியாகவும் இழைக்கப்பட்டன. ஆயினும் ஸ்டாலின் ஆயுட்காலம்வரை திரிபுவாதப் போக்குகள் மேலோங்க முடியவில்லை. ஸ்டானின் மரணத்தை அடுத்துச் சிறிது காலத்தில் குருஷ்சேவ் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் திரிபுவாதச் சிந்தனை சோவியத் யூனியனிலும் சர்வதேச ரீதியாகவும் ஊக்குவிக்கப்பட்டது. இதன் விளைவாக சர்வதேசரீதியாக கம்யூனிஸ இயக்கம் பலவீனப்படவும் பிளவுபடவும் நேர்ந்தது.

திரிபுவாதத்தை எவ்வாறு அடையாளம் காண்பது என்பது ஒரு முக்கியமான விஷயம். மாக்ஸியம் என்பது விறைப்பான ஒரு தத்துவமுமல்ல, அது காணுகின்ற உலகம் மாறாமல் ஸ்தம்பித நிலையில் நிற்கும் பொருளுமல்ல. எனவே மாக்ஸிய ஆய்வு உலகின் மாற்றங்களைக் கணிப்பிலெடுக்க வேண்டும். காலம், இடம், சூழ்நிலை போன்ற ஒவ்வொன்றுமே கணிப்பிலெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாமல் ரஷ்யப் புரட்சியை ஒரு நிரந்தர மாதிரியுருவாகவும் எல்லா நாடுகட்குமே கண்மூடித்தனமாகப் பிரயோகிக்கக்கூடிய ஒன்றாகவும் கருதுவது ஏட்டுச்சுரக்காய்த்தனமான வரட்டு மாக்ஸியம். மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாஓ போன்றோரைத் தங்கள் குறுகிய நோக்கங்கட்காக மேற்கோள் காட்டுவோரும் ஏட்டுச்சுரக்காய் மாக்ஸியவாதிகளைப் போன்றே சிலசமயம் செயற்படுகிறார்கள். அதே சமயம், மாற்றங்களைக் கணிப்பிலெடுப்பது என்பது அடிப்படையான பிரச்சினையையே உதாசீனம் செய்வதாகவோ, முக்கியமான இலட்சியத்தையே புறக்கணிப்பதாகவோ அமைவதும் கண்டிக்கத்தக்கது.

திரிவுவாதம் தன் சந்தர்ப்பவாதப் போக்கிற்கு அனுசரணையாக உலகின் சமகால நிலையைத் திரித்துக் காட்டியது. ஏகாதிபத்தியத்தின் வலிமையை (அது உண்மையில் வலிமை அல்ல வீழப் போகும் ஒரு அரக்கனின் இறுதித் துடிப்பு என்பதை மறைத்து) ஒரு காரணமாகக் காட்டி ஏகாதிபத்தியத்துடன் உடன்பாடு காணவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. எனவே ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், காலனித்துவம் போன்ற சக்திகட்கு எதிரான புரட்சிகர எழுச்சிகளை விட, சர்வதேச அரங்கில், சமாதான சகஜீவனம் முக்கியமான விஷயமாயிற்று. அணு ஆயுத யுத்த ஆபத்து ஏகாதிபத்தியத்தின் வலிமை என்பன முற்றாகவே மறுக்கப்படவேண்டியவையுமில்லை; ஏகாதிபத்தியத்துடன் வலி

(5-ம் பக்கம் பார்க்க)

## ஒரு கேள்வியும் பதிலும்

# தோ. தொழிலாளரை ஏமாற்ற

## மகாவலி அமைச்சரின் மாய்மாலப் பேச்சு!

"தோட்டத் தொழிலாளர்கள் 1977ம் ஆண்டுக்கு முன்பு முதலாளித்துவப் பிடிக்குள் சிக்கித் தவித்தார்கள். இன்று அவர்கள் உரிமை பெற்றவர்களாக உள்ளனர். மாவலித் திட்டத்திற்கு செலவிட்டது போல் தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு பல கோடி ரூபாய்கள் செலவிடப்பட இருக்கிறது. லக்ஷ்மியும் ரண்மெனிக்காவும் வர்க்க ரீதியில் ஐக்கியப்படுவது அவசியம்."

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி மாகவலி அமைச்சர் காமினி திசநாயக்கா தோட்டத் தொழிலாளர்களுக்கு கூறியிருக்கிறார். இவ் உபதேசத்தைவேறுயாரரவது பேசி இருந்தால் அதில் சிறிதளவாவது அர்த்தம் இருந்திருக்கும். தோட்டத் தோழிலாளர்களுக்கு அநீதி மேல் அநீதி விளைவித்துவரும் ஒரு அரசின் அமைச்சர் மட்டுமன்றி அவரது அமைச்சின் நடவடிக்கைகளால் நேரடியாகவே பாதிக்கப்பட்டுவரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இவரது பேச்சு எவ்வாறு இருக்கும். வெறும் மாய்மாலப் பேச்சாகவே இருக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் இந்த அரசின் கீழ் சிறு சம்பள உயர்வையும், வேறு அற்ப சலுகைகளையும் பெறுவதற்கு பெரும் போராட்டங்களை நடத்தவேண்டி இருந்தது. அடிக்கடி இதே அரசின் அமைச்சர் தொண்டமானே ஜனாதிபதியிடம் தூது செல்லவேண்டி ஏற்பட்டது. இன்றும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் அகதிகளாக வந்து குடியேறிய தோட்டத் தொழிலாளர்கள் திட்டமிட்ட குடியேற்றத்திற்காக காணி அமைச்சினாலேயே துரத்தப்பட்டு வருகின்றனர். கொடுத்த சம்பள உயர்வைக்கூட சரியானபடி தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தோட்டப்புற இளைஞர்கள் பயங்கரவாதிகள் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். எல்லாவற்றையும் விட தோட்டத் தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு பாதுகாப்பற்ற நிலையில் பயப்பீதியுடன் யூ. என். பி யின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதை அண்மையில் நடைபெற்ற இ. தொ. கா. வின் மாநாட்டில் ஜனாதிபதி முன்னிலையிலேயே திரு. தொண்டமான் பகிரங்கமாக கூறி உள்ளார். 1977ல் இருந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு யூ. என். பி இழைத்துவரும் அநீதிகளுக்கு அற்ப சம்பள உயர்வோ அன்றி தொண்ணூறாயிரம் பேருக்கு பிரஜாவுரிமையோ பரிகாரமாகாது. பிரஜாவுரிமை வழங்குவதன் பிரதான நோக்கு தேர்தலில் வாக்குப் பெறவேயாகும்.

இவ்வாறு தோட்டத் தொழிலாளர்கள் என்றும் இல்லாதவாறு பாதிக்கப்பட்டுள்ள வேளையில் சகாவலி அமைச்சரின் பேச்சு தோட்டத் தொழிலாளர்களைத் திடுக்கிட வைக்கிறது. இந்த அமைச்சரா இவ்வாறு பேசுகிறார்? என்று கேட்கிறார்கள். இது ஒரு மாய்மாலப் பேச்சுத்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இன்று தோட்டத் தொழிலாளர்கள் இல்லை. அவர்களை இனிமேலும் யூ. என். பியால் ஏமாற்ற முடியாது. ★

# மலையக மக்களும் பயங்கரவாதிகளா?

## இளைஞர்கள் துன்புறுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும்!

இன்றைய அரசுக்கும் அதன் படைகளுக்கும் வடக்கு கிழக்கில் வாழ்வோர் குறிப்பாக இளைஞர்கள் சகலரும் பயங்கரவாதிகளாகவே காட்சி கொடுக்கின்றனர். "அஞ்சினவன் கண்களுக்கு ஆகாயம் எல்லாம் பேய்கள்" என்பது போலவே பயங்கரவாதம் என்று சொல்லப்படுவது அரசின் கண்களுக்குத் தெரிகிறது.

இன்று வடக்கு கிழக்குக்கு அப்பால் மலையகத்திலும் பயங்கரவாதம் என்று கூறி எதுவுமறியாத இளைஞர்கள் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். அநாமதேயத் தகவல்களையும், பழிவாங்கல் நோக்கிலும் இளைஞர்கள் பயங்கரவாதிகளாக காட்டப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்ட பதினான்கு இளைஞர்கள் ஒருமாதமாக தடுத்து வைக்கப்பட்டனர். பின்பு தொழிற் சங்கங்கள், தொண்டமான் போன்றோரின் வற்புறுத்தலின் பேரிலேயே விடுவிக்கப்பட்டனர். இவர்களுக்கும் அரசினால் கூறப்படும் பயங்கரவாதம் என்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதே உண்மை. ஆனால் யூ, என். பி அரசுக்கு எதிரான கருத்துக்களை ஒரு மலையக இளைஞன் கொண்டிருப்பானால் அந்த இளைஞனைப் பயங்கரவாதி எனப் பட்டம் சூட்ட முடியுமா?

உதாரணமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இ—து) உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அதன் வாலிபர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மலையகத்தில் கணிசமான அளவில் உள்ளனர். அவர்கள் இந்த அரசுக்கு எக்கட்டத்திலும் ஆதரவு தெரிவித்துப் பேசமாட்டார்கள். இதே போல் பல தொழிற்சங்கங்கள் பொது ஸ்தாபனங்களில் அரசையும் அதன் செயல்களையும் கண்டித்து எதிர்ப்பவர்கள் நிறைய உள்ளனர். அப்படியானால் அவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா?

அரசாங்கத்தைக் கண்டிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று காட்டும் முயற்சியையே அரசு படிப்படியாகச் செய்து வருகின்றது. அதாவது இலங்கையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்று காட்டி ஒரே ஒரு பிரச்சினை பயங்கரவாதம் மட்டுமே என்று உள்நாட்டிலும், உலகிலும் பிரசாரம் செய்ய அரசு முயலுகின்றது. அதன் ஒரு அம்சமே மலையகத்தில் பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியாகும். இது விரைவில் தென் இலங்கைக்குப் பரப்பப்பட்டு நாடு முழுவதிலும் அரசு எதிர்ப்பு சக்திகள் வேட்டையாடப்படுவதற்கே அத்திவாரம் இடப்பட்டு வருகின்றது.

மலையக மக்களைப் பல வழிகளாலும் துன்புறுத்தி வரும் இந்த அரசு தற்போது பயங்கரவாதிகள் என்ற போர்வையில் மலையக இளைஞர்களை துன்புறுத்தி வருகின்றது. இது தொடரப்படாது இருப்பதற்கு மலையக மக்கள் உறுதியான இயக்கத்தை அரசுக்கு எதிராக முன்னெடுப்பது அவசியம். ★

# திரிபுவாதம் என்றால் என்ன?

4-ம் பக்கத் தொடர்

ந்துமோத வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எந்த ஒரு சோஷலிசநாட்டுக்கும் அன்று இருந்ததுமில்லை. ஆனாலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எழுச்சிகளை விட, எந்த விலை கொடுத்தும் ஏகாதிபத்தியத்துடன் உடன்பாடு காண்பது முக்கியம் என்பது மிகவும் தவறான ஒரு போக்காகும். இப்போக்கின் மிகவும் கொடிய அம்சம் என்னவெனில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தன்னை மற்ற எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகட்கும் மேலானதும் அவற்றின்மீது ஆதிக்கமும் அதிகாரமும் கொண்டதுமான கட்சியாகக் கருதியமையாகும். இதன் விளைவு என்னவெனில் சோவியத் திரிபுவாதத்தின் சமாதான சகஜீவனத்தின் விலையைக்கொடுப்போர் உலகின் மற்றைய கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவை சார்ந்த ஏகாதிபத்திய விரோத எழுச்சிகளுமே. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே சமத்துவத்தை வலியுறுத்தியதோடு ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளே அவற்றின் தேசிய நிலைகள் பற்றிச் சுதந்திரமான முடிவுக்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்தியது. தலையிடாமை என்பதும் நட்புறவின் நிராகரிப்பல்ல சமத்துவமான நட்புறவின் வலியுறுத்தல் என்பதே சீனக்கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. இந்த நிலைப்பாடு எவ்வளவுசரியானது என்பதை 1968 செக் ஆக்கிரமிப்பும் 1981—82 போலந்து சம்பவங்களும் தெளிவுபடுத்தின.

உள்நாட்டு மட்டத்தில் திரிபுவாதம் மக்களது ஆயுதமேந்திய புரட்சியை முற்றாக நிராகரிக்கவும் பாராளுமன்றப் பாதையையே முக்கியமான போராட்ட முறையாகக் காட்டி சமாதான முறையில் சோஷலிஸப் புரட்சியை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்த முடியும் என்று வலியுறுத்தினர். இதன் விளைவாக கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஏற்பட்ட பிளவுகள் ஒருபுறமிருக்க, திரிபுவாதக் கட்சிகளில் இருந்தவர்களும், (நடைமுறையளவில்) கட்சியும் தேசிய முதலாளித்துவக் கட்சிகளது கூறுகளாயின. சமயா சமயங்களில் அவர்களது மாக்ஸியம் தேர்தல் சுலோகங்கள் அளவுக்குக்கூட உயரத்தவறின. திரிபுவாதக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சராசரி பாராளுமன்ற பூர்ஷுவா தாராளவாத அல்லது 'சோஷலிஸக்' கட்சிகளை விட கீழான சந்தர்ப்பவாதிகளாகிய சூழ்நிலைகள் பல ஏற்பட்டன. இன்று, நேரடியாக சோவியத் எஜமானர்களது நலன்கட்கு உதவியாக இல்லாது போனால் ஒழிய, திரிபுவாதிகளது அரசியல் வெறும் பாராளுமன்ற பூஷுவா அரசியலாகவே இருந்து வருகிறது.

'பாராளுமன்றத்தை நிராகரித்து வன்முறைப் போராட்டத்தை வலியுறுத்துவதும் சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்களை வலியுறுத்துவதும் அப்படியே சரியான மார்க்ஸிஸ — லெனினிஸப் பார்வையாகிவிடுமா?' என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இங்கே தான் சில ட்ரொட்ஸ்கிஸவாதிகள் போன்றோர் எதிர்கோடிக்கு ஓடிவிடுகிறார்கள்.

மாக்ஸியம் எந்தவொரு பயனுள்ள போராட்டமுறையையும் நிபந்தனையின்றி நிராகரித்ததில்லை. ஒவ்வொரு போராட்டமுறைக்கும் உரிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் உண்டு. ஆயினும் முதலாளித்துவம் தவிர்க்கமுடியாமலே சமாதானமான சமுதாயமாற்றத்துக்கான சூழ்நிலைகளை இல்லாமற் செய்துவிடும் என்பதை எந்த மாக்ஸியவாதியும் மறந்துவிட முடியாது. எனவே மாக்ஸியவாதிகள் தொழிற்சங்கப் போராட்டங்களையோ பாராளுமன்றத் தேர்தல்களையோ தங்கள் முக்கயமான போராட்ட ஆயுதங்களாகக் கருதாத அதேசமயம் அவை பயன்தரக்கூடிய சூழ்நிலைகளையும் அவற்றை முற்றாகவே ஒதுக்குவது கேடாக அமையும் சூழ்நிலைகளையும் பற்றி மிகுந்த தெளிவுடன் இருப்பது அவசியம்.

ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பது பற்றியும் இன்று சோவியத் யூனியன் ஒரு மேலாதிக்கப் பெருவல்லரசாகியுள்ளது என்பது பற்றியும் தெளிவில்லாமல் ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தை முக்கியப்படுத்துவது அர்த்தமற்றது. தென் அமெரிக்காவிலும் பல வேறு ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் முக்கியமாக உள்ளது போல சோவியத் ஆதிக்கமும் நாடுகளையும் மக்களையும் நசுக்கும் சூழ்நிலைகளையும் நாம் நினைவில் வைத்திருப்பது நல்லது. எனவேதான் ஒவ்வொரு நாட்டினதும் யதார்த்தமான நிலையை ஒட்டியே ஏகாதிபத்திய விரோதப் போராட்டம் அமையமுடியும்.

இறுதியாக, இன்னுமொரு நியாயமான சந்தேகமும் எழமுடியும். மாக்ஸ்—லெனின் போன்றோர் உலகை ஆராய்ந்த நிலைகளில் உலகம் சுதந்திரமான முதலாளித்துவம் வளர்ந்து விட்ட ஏகாதிபத்தியம் என்ற நிலைகளில், முறையே, இருந்தது. இன்று ஏகாதிபத்தியம் மேலும் ஒரு படி வளர்ந்துவிடவில்லையா? காலனி முறையின் இடத்தில் புதிய நவகாலனி முறை வெவ்வேறு வடிவங்களில் உருவாகி விடவில்லையா? உடல் உழைப்பு மட்டுமன்றி மூலவளங்களின் தட்டுப்பாடு போன்றவை கூட அரசியல் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அம்சமாகி விடவில்லையா?

உண்மை. ஆனால் நவகாலனி முறையும் பன்னாட்டு நிறுவனங்களும் வர்க்க சமுதாயத்தையோ சுரண்டல் முறையையோ இல்லாமற் செய்து விடவில்லை. மாறாக மேலும் உக்கிரமாக்கி விட்டன. சுரண்டல் இன்று சகல தேசிய எல்லைகளையும் கடந்த ஒன்றாகிவிட்டது. மாக்ஸிய இயக்கம் இதைக் கணிப்பில் எடுத்தே உள்ளது, உண்மையில் மாக்ஸின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கருத்தும் லெனினின் ஏகாதிபத்தியம் பற்றிய மதிப்பீடும் உலகின் மாற்றங்களால் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆயினும் மாக்ஸிய இயக்கங்கள் நடைமுறை இயக்கம் பற்றிக் கற்க வேண்டியவை நிறைய உள்ளன. அவை போராட்டத்தின் போக்கிலேயே கற்கப்படுவன.

மூலவளங்களின் தட்டுப்பாடு, சனத்தொகை, சுற்றாடலின் அசுத்தம் என்பனவும் இன்று முக்கியமான விஷயங்கள். ஆனால் இன்னும் கூட அவை எந்த நிலையிலும் சுரண்டல் சமுதாய முறையை விடவும் வர்க்கப் போராட்டத்தைவிடவும் முக்கியமானவையாகி விடவில்லை. எந்தவொரு மாக்ஸியவாதியும் இவற்றின் யதார்த்தபூர்வமான முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்த முடியாது. அதேபோல, அதிமுக்கியப்படுத்துவதும் முடியாது.

சுருக்கமாகச் சொன்னால் அலட்சியப்படுத்துவது விறைப்பான வரட்டுவாதத் தன்மையுடையது, அதிமுக்கியப்படுத்துவது திரிபுவாதத் தன்மையுடையது.

★

செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது. செம்பதாகை Registered as a Newspaper in Sri Lanka.

# வடக்கில் ராணுவ நடவடிக்கை தொடர்வதால்

## மீனவர் முதல் மாணவர் வரை பாதிப்பு!

இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஒரே வழியாக இருக்கக்கூடிய அரசியல் தீர்வு பற்றிய நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து போகிறது. அதே வேளை ராணுவ நடவடிக்கையின் புதிய புதிய அம்சங்கள் புகுத்தப் படுகின்றன. அமெரிக்க இஸ்ரேலிய ஆலோசனைகள் பரீட்சிக்கப் படுகின்றன. அதன் விளைவுகளால் வடபகுதியின் பலதரப்பட்ட மக்களும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இதில் ஒவ்வொரு பகுதி மக்களும் ஒவ்வொரு விதமான பாதிப்புகளை அடைந்துவருகிறார்கள். குறிப்பாக வடக்கே மன்னார் தொட்டு முல்லைத்தீவு வரையான கடற்கரை பிரதேசங்களில் வாழ்ந்து தமது தொழிலை செய்துவந்த மீனவர் நிலை இன்று படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்று இப்பகுதிகளில் உள்ள மீனவர்கள் கடலில் தொழில் செய்யவும் முடியாத, தரையில் பாதுகாப்பாக வாழவும் முடியாத அவல நிலையை அடைந்துள்ளனர். அவர்களுக்கு மாற்றுத் தொழில் என்பது கிடையாது. அதனால் அவர்களது வாழ்க்கை நிலை மோசமடைந்துள்ளது. அரசாங்கக் கடன், தனியார் கடன், பங்குத் தொழில், கூலித்தொழில், போன்ற பல் வகை வடிவங்களில் செய்து வந்த கடற்தொழில் இன்று அரசின் ராணுவ நடவடிக்கைகளால் முற்றாகச் சீரழிந்து சின்னாபின்னப்பட்ட நிலையில் உள்ளது. இந்நிலை மேலும் நீடித்தால் அத்தொழிலாளர்களும், குடும்பங்களும் பட்டினி நிலையில் வீழும் அபாயம் தோன்றும். வடபகுதியினதும், தமிழர் சமுதாயத்திலும் மீனவ மக்களின் தொகை கணிசமானது மட்டுமன்றி அத்தொழிலும் முக்கியமானதாகும். இதையிட்டு அரசுக்கு எவ்வித கவலையும் இருக்கப்போவதில்லை. எனவே தமிழ் மக்கள் நலன் விரும்பும் ஸ்தாபனங்களும் இயக்கங்களும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தகுந்த மாற்றுத் திட்டம் எதையாவது முன்வைத்து செயல்பட முன்வரல் வேண்டும்.

இதேபோல் மாணவர்களின் நிலையும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. கல்லூரிகள் கொழுத்தப்பட்டும் கொள்ளை இடங்களாகவும் உள்ளன. அத்துடன் பாடசாலை செல்லும் மாணவர் திடீரெனக் கைது செய்யப்படுவது, தாக்கப்படுவது போன்றவை தாராளமாக நடைபெறுகின்றன. வடபகுதியின் பிரபல கல்லூரியான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஒரு பகுதி எரிக்கப்பட்டதுடன் அதன் அருகே ஆயுதப்படைப் பிரிவும் நிறுத்தி வைக்கப்பட்டதால் மாணவர் பாடசாலைகளுக்கு செல்லமுடியாது உள்ளது. இவற்றுடன் கூடவே ஒழுங்குபடுத்தப்படாத பகிஸ்கரிப்புக்களும் மாணவர்களைப் பாதிக்கவே செய்கின்றன. இவையாவும் சேர்ந்து கல்வியில் ஒரு சந்ததியின் இடைவெளியை ஏற்படுத்தி விடக்கூடியநிலை உருவாகி உள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது ஒருபுறத்தில் வடபகுதி கைப்பற்றப்பட்ட பிரதேசம் போலவும், மறுபுறத்தில் கைவிடப்பட்ட பிரதேசம் போலவும் தென்படுகிறது. எனவே முதலில் அரசு கைப்பற்றப்பட்ட பிரதேசம் ஒன்றில் நடந்து கொள்வது போன்ற நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். இரண்டாவது கைவிடப்பட்ட பிரதேசம் ஒன்றில் தாம் நினைத்தவை எல்லாவற்றையும் நிலைநாட்ட முற்பட்டு மக்களுக்கு துன்பங்களை உருவாக்கும் நடைமுறைகளும் கைவிடப்பட வேண்டும்.

★

# யாழ் - நகரில் கொள்ளைக்கு எதிராக ஓர் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்- ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் முழுநாட்டினதும் கூட்டுறவு இயக்கத்திற்குமே ஒரு முன்னோடிச் சங்கமாகும். 1918ம் ஆண்டில் கூட்டுப் பங்குத் தொகுதி அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் பாவனையாளர்கள் நலன்கருதும் பொது ஸ்தாபனமாகும். இத் தாபனம் கடந்த 84 ஏப்பிரல் 9ம் திகதி அரச பயங்கரவாதத்தால் கொழுத்தி எரிக்கப்பட்டது. அதனால் உயிர் உடமைகளும் இழக்கப்பட்டன.

இதேவேளை இத்தாபனம் கொள்ளையடிப்புச் சம்பவங்களுக்கு (எரிக்கப்பட்ட பின்பும்) பல தடவை இலக்காகியும் உள்ளது. மீண்டும் மீண்டும் கொள்ளை என்றால் அது முதலில் யாரைப் பாதிக்கும். அங்கே வேலைசெய்யும் ஊழியர்களைத்தானே? அவர்கள் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பார்கள். ஆதலாலேயே கொள்ளைக்கு எதிராக அவ் ஊழியர்கள் ஒரு அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தியிருக்கிறார்கள் ''நாம் பிறந்த மண்ணிலேயே நமது இனத்தைச் சேர்ந்தவர்களாலேயே மிரட்டப்படும் சூழ்நிலையில் வேலை செய்ய வேண்டிய அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். நாம் உயிர் வாழ்வதற்காகவே இந்த ஸ்தாபனத்தில் வேலை செய்கின்றோம். அந்த உயிருக்கு நம்மவர்களாலேயே எந்த நேரம் என்ன நேரிடும் என்பதை அறியாத பதட்ட நிலையில் வேலைசெய்ய வேண்டியுள்ளது மிக மிகப் பரிதாகரமானது.'' இவ்வாறு அவ் ஊழியர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ் அடையாள வேலை நிறுத்தம் வடபகுதி மக்களின் கொள்ளைகளுக்கு எதிரான குமுறல்களின் ஒரு துணிவான வெளிப்பாடாகும். அவ் ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தின் போது வைத்திருந்த ஒரு சுலோக அட்டையில் 'கொள்ளை அடிப்பவர்கள் போராளிகளா? போலிகளா?' என்ற முக்கியமான ஒரு கேள்வியையும் எழுப்பியிருந்தார்கள். இதற்கு நியாயமான பதிலை அவ் ஊழியர்கள் மட்டுமன்றி சகல தமிழ் மக்களுமே எதிர்பார்க்கின்றனர்.

★

## அபிவிருத்திப் பாதையில்!

அண்மையில் 7 ஆயிரம் ஆசிரியர்களை தெரிவு செய்ய ஒரு போட்டிப் பரீட்சை நாடு முழுவதும் நடைபெற்றது. அப்பரீட்சைக்கு விண்ணப்பித்து அதில் பங்கு கொண்டோரின் தொகை 1 லட்சத்து 10 ஆயிரம் பேராகும். இது வேலை இல்லாத்திண்டாட்டத்தின் அதிகரிப்பா? அன்றி குறைப்பா? அபிவிருத்திப் பாதையில் அல்லவா நாடு செல்லுகிறது!

## நாய் வாலை...... ......

2:ம் பக்கத் தொடர்.........

எனக் கூறி கூட்டணியினர் ஜே. ஆருக்கு வாக்களித்து வாக்குச் சேகரித்தகதை பழங்கதையல்ல. அது மட்டுமல்ல தமிழ் மக்கள் கூட்டணியின் ஆணையையும் மீறி யூ. என். பிக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் பல்லாயிரக் கணக்கானவாக்குகளை அளித்தனர். அதைக்கண்டு மிரண்ட அமிர்தலிங்கம் அந்த வாக்குகள் வெங்காயம் மிளகாய்க்கு கிடைத்த வாக்குகள் எனக் கூறி தமிழ் மக்களின் யூ. என். பி. எதிர்ப்பையே கொச்சைப் படுத்தினார்.

இன்றைய நிலையிலும் கூட மின்னேரியா, குண்டசாலை தொகுதிகளில் மக்கள் யூ. என். பிக்கு எதிராக வாக்களித்து தமது எதிர்ப்புணர்வை இந்த அரசுக்கு எதிராகத் தெரிவிக்க வேண்டும் என்று கூறுவதற்கு திராணியற்று எமக்கு அக்கறை இல்லை என்று கூறுவது யூ. என். பிக்கு உதவுவதேயாகும்.

கடந்த காலம் முழுவதும் தென்னிலங்கையின் முற்போக்கு, ஜனநாயக சக்திகளை மூர்க்கத்தனமாக எதிர்த்து நிராகரித்து யூ. என். பி பிற்போக்கிற்கே ஆதரவு கொடுத்து வந்தவர்கள் இத் தமிழ்த் தலைமையினர். ஆனால் வடக்கே தமிழ் மக்கள் மத்தியில் வந்து முற்போக்கு ஜனநாயக சக்திகளைத் திட்டி, அவர்களுக்கு எதிராக மக்களை இனவெறி கொள்ளும்படி செய்வதிலேயே தமது அரசியல் பிழைப்பை நடத்தி வந்துள்ளார்கள்.

அரசியல் சாணக்கியம் அற்று, இலங்கையின் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் தென்னிலங்கையின் முற்போக்கு ஜனநாயக சக்திகளோடு ஐக்கியப்படுவதன் அவசியத்தை திட்டமிட்டே சீர்குலைத்து, அதே வேளை யூ. என். பி பிற்போக்கு சக்திகளோடு கூடிக் குலாவி வந்த வரலாறே தமிழ்த் தலைமையில் அரசியல் 'வரலாறு' இன்றும் யூ. என். பி கொடுமை மேல் கொடுமை இழைத்து வரும் வேளையிலும் அதை எதிர்த்து ஒரு வார்த்தை தானும் கூறி தென் இலங்கையின் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் பக்கம் நிற்கமுடியாத பிற்போக்கு நிலைப்பாட்டையே அமிரின் இடைத்தேர்தல் பற்றி எமக்கு அக்கறை இல்லை கூற்று தெளிவாக்குகிறது.

★

1-ம் பக்கத் தொடர்.........

## குண்டசாலை...

தப்பட்ட சர்வசன வாக்கெடுப்புக்கான தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்படவில்லை என்றும், மோசடியும், தில்லுமுல்லுக்களும் இடம் பெற்றன என்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் உண்மையேயாகும். அது மட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்டசபைத் தேர்தலில் அப்பட்டமான மோசடிகள் இடம் பெற்றதையும் அதைப் பற்றி அரசு அசட்டை செய்ததையும் நாட்டுமக்கள் நன்கு அறிவர். ஆதலினாலேயே எதிர்வரும் இடைத்தேர்தல்கள் நியாயமான முறையில் நடைபெறவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறு தேர்தல் உரிய முறைப்படி நடைபெற்றால் யூ. என். பி நிச்சயம் தோற்கடிக்கப்படவே செய்யும். ஏனெனில் மக்கள் யூ. என். பியின் கீழ் அனுபவித்து வரும் கஷ்டங்கள் தலைக்கு மேல் உயர்ந்து விட்டன. தமது எதிர்ப்புணர்வை அரசுக்கு எதிராகக் காட்ட இத் தேர்தலை மக்கள் பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகின்றது.

ஆனால் இந்நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் விஷயங்கள் நடத்தப்படுகின்றன. அதாவது யூ. என். பி இன்றைய பிரதான எதிரி என்பதை முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைத்தும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் இவ்விரண்டு தொகுதிகளிலும் தமக்குள் ஐக்கியப்பட்டு தனி ஒரு வேட்பாளரை யூ. என். பிக்கு எதிராக நிறுத்தியிருக்கலாம். இருமுனைப் போட்டி என்பதற்குப் பதிலாக மும்முனைப் போட்டி நால்முனைப் போட்டி என வளர்ந்து செல்வது யூ. என். பிக்கே வாய்ப்பளிக்கக் கூடியதொன்றாகும். அதனாலேயே இரண்டு தொகுதிகளிலும் 90 வேட்பாளரைப் போட்டியிடச் செய்த சூழ்ச்சியும் இடம் பெற்றுள்ளது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இடதுசாரிகள் என்போர் தமது செயல்கள் யாருக்கு உதவுகின்றன என்பதை எண்ணிப் பார்ப்பார்களா? அவர்கள் அவ்வாறு சிந்திக்க மாட்டார்கள். அவர்களது கடந்தகாலச் சரித்திரமே இரண்டில் ஒரு முனைக்குத் தாவுவதாகவே இருந்து வந்துள்ளது. நிதானமான போக்கு என்பதே அவர்களுக்குக் கிடையாது. சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து பிரிந்த பகுதியினரை வைத்து சுதந்திரக்கட்சியை எதிர்க்க வைத்துள்ளனர், இதையே முன்பும் செய்து இந்த இடதுசாரி எனப்பட்டவர்கள் தோல்வி அடைந்தும் அதில் இருந்து படிப்பினை பெற்றதாகத் தெரியவில்லை.

எது எப்படி இருந்த போதிலும் குண்டசாலை மின்னேரியா தொகுதி மக்கள் யூ. என். பிக்கு எதிரான பிரதான வேட்பாளர்களுக்கு வாக்களித்து யூ. என். பியை தோற்கடிக்க வேண்டும் என்பதே சகல யூ. என். பி எதிர்ப்பு சக்திகளினதும் விருப்பமாகும். இது முழு நாட்டு மக்களுக்கும் முன்மாதிரியாகும்.

★

1-ம் பக்கத் தொடர்.........

கும் அரசினுள் உள்ள பேரினவாதிகளையே மக்களுக்கு இனம் காட்ட வேண்டும்.

எனவே வடக்கின் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி மேலும் தமிழ் மக்களை விரக்தியின் கடைசி விழும்பிற்கும் தள்ளிவிடும் நிலையைச் செய்யாது அவர்களிடம் இருந்து பணத்தைப் பெறுவது போல் அபிவிருத்திகளையும் அரசு தொடரவேண்டும். அதை நிறுத்தவோ அப்பணத்தைப் பாதுகாப்புக்குப் பயன்படுத்தவோ அரசுக்கு உரிமை இல்லை.

★

அச்சுப்பதிவு: யாழ்ப்பாணம் அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்.